# இடைக்காட்டுச்சித்தரின் மெய்ஞ்ஞானம்

முனைவர் பா.நளினிப்ரியா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்
மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்.
Email.ID: nalinipriya_tam@avinuty.ac.in

20

**ஆய்வுச்சுருக்கம்**

சித்தர்களின் மெய்ஞ்ஞானம் என்பது அவர்கள் கண்டறிந்த அறிவு, மருத்துவம், இரசவாதம் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். இத்தகைய சித்தர்கள் நிறைமொழி மாந்தர்கள் என்று அழைக்கப்பட்டனர். சி;த்தர்கள் உடலின் உறுதியையும் உள்ளத்தின் மேன்மையையும் பாதுகாக்க ஆசைகளை அடக்கியவர்கள், மருந்துகள் இல்லாமலே நோய்கள் இன்றி வாழ்ந்தவர்கள், நெருப்பிலே நிற்பது, நீர் மேல் நடப்பது, காற்றில் பறப்பது போன்ற அபூர்வச் சித்து வேலைகளையும் நிகழ்த்தியவர்கள், உணவு உட்கொள்ளாமலே பசியும் தாகமும் இன்றி வாழ்ந்தவர்கள், தென்னிந்திய தமிழ் மருத்துவத்தை உருவாக்கித் தந்தவர்கள். பிராணயாமம், யோகாசனம் போன்றவற்றின் மூலம் உடலில் ஏற்படக்கூடிய அசுத்தங்களை நீக்கும் வழிமுறைகளையும் கண்டறிந்தவர்கள். அத்தகைய சித்தர்கள் கூறிய மெய்ஞ்ஞானக் கருத்துக்களின் மூலம் பரம்பொருளை அடையமுடியும். உண்மையான மெய்ப்பொருளை அடைவதற்கான நெறி முறைகளையும் வழிகளையும் இடைக்காட்டுச் சித்தர் பாடல்களின் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கலைச்சொற்கள்**

சரீரம் - அத்தன் - ஆவி – பசு – கோனார் - மெய்ஞ்ஞானம் - சஞ்சலம் - மெய் - அல் - சிதாகசம் - விண்ணாடிவித்து – பரத்துவம்..

**முன்னுரை**

இடைக்காட்டுச் சித்தர் இடையர் குலத்தில் தோன்றியவர். இடையனாக இருந்துகொண்டு பசுக்களாகிய ஆன்மாக்களை நோக்கிப் பாடியதால் இவரை இடையர் என்றும் கூறுவர். இவரை இடையர் இல்லை என்று பலரும் கூறுகின்றனர். கொங்கண முனிவரின் மாணவர் என்ற அறிஞர்குலம் கூறுகின்றனர். இவருடைய காலம் கி.பி.15 ஆம் நூற்றாண்டு என்று தெரியவருகிறது. இவரது பாடல்களின் கூறும் மெய்ஞ்ஞான கருத்துக்களின் வழி முத்திக்கான

வழிகளை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**இடைக்காட்டுச்சித்தர் வரலாறு**

இடைக்காடரின் பாடல்கள் சங்க இலக்கிய நூல்களிலும் காணப்படுகின்றன. இவர் தொண்டை மண்டலத்தில் தோன்றியவர். இடையர் பொதிகை மலைச் சாரலில் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும் பொழுது நவ சித்தர்களில் ஒருவர் வந்து இவரிடம் ஆட்டுப்பாலைக் கொடுக்கும்படி கேட்டார். இவரும் அவருக்கு அன்போடு பாலைக் கொடுத்து அவருடைய மனம் மகிழுமாறுச் செய்தார். மனம் மகிழ்ந்த சித்தர் இந்த இடையனுக்கு ஞானக் கல்வி என்னும் பாலினை ஊட்டினார். அந்தத் தருணத்திலிருந்து இவர் இடையர் சித்தர் ஆனார்.

பன்னிரண்டு ஆண்டுகளில் நாடு முழுவதும் பஞ்சத்தில் சிக்கி வறட்சியுற்று அழியவிருக்கிறது என்று தம் ஞான அறிவின் வாயிலாக அறிந்து கொண்ட இவர் தம் ஆடுகளை எப்போதும் கிடைக்கக்கூடிய எருக்கிலைகளை தின்னும்படி பழக்கம் செய்தார். இவர் நினைத்தபடியே நாடு பஞ்சத்தில் துன்பறுகையில் இவருடைய ஆடுகள் மட்டும் எருக்கிலைகளை உண்டே உயிர் வாழ்ந்திருப்பதை அறிந்து நவகிரக நாதர்கள் ஒன்பதின்மரும் இவரைக் கண்டு இவரது உண்மையை அறிய முற்பட்டு இவரிடம் வந்தனர். சித்தர் இவர்களை நன்கு உபசரித்து தம் ஆட்டின் பாலைப் இவர்களுக்குப் பருக அளித்தார். அவர்களும் அதனைப் பருகினர். ஆடுகள் எருக்கிலைகளைத் தின்றதால் அதன் சத்து பாலில் இருந்தமையால் நவ நாயகர்கள் மயங்கி தலை சாய்ந்தனர். சித்தர் உள்ளத்திற்குள் கிரகங்களின் சாரநிலை எவ்வாறு இருந்தால் மழை பெய்யுமோ அந்நிலையில் கிரகங்களை மாற்றி அமைத்தார். அவர் மாற்றி அமைத்த உடனே மழை பொழிந்து ஆறுகளும் குளங்களும் நீர் நிரம்பி ஓடிய நிலையில் பஞ்சம் தீர்ந்து சித்தர் மகிழ்ச்சியடைந்தார். நவகிரக நாயகர்களும் ஊரின் பஞ்சம் தீர்த்த இவரை ஆசிர்வதித்துச் சென்றனர்.

இடைக்காட்டுச் சித்தர் ‘சரீரம்’ என்னும் மருத்துவ நூலினை இயற்றியுள்ளார். இவர் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடியுள்ளார். இவர் முல்லைத் திணையை மிகச் சிறப்பாக பாடியுள்ளார். அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய சங்க இலக்கிய நூல்களிலும் திருவள்ளுவ மாலையிலும் இவரது பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பல ஆண்டுகள் வாழ்ந்து திருவண்ணாமலையில் சமாதியடைந்தார். வருடாதி, மருத்துவ, தத்துவப் பாடல்கள், ஞானசூத்திரம் 70 ஆகிய நூல்களை இவர் எழுதியுள்ளார். இவரது பாடல்களில் ஆயரோடு தொடர்புடை பல சொற்கள் உள்ளன. இவரது பாடல்களில் பலரோடு கிளத்தல், நெங்சோடு கிளத்தல், அறிவோடு கிளத்தல் போன்ற பகுதிகளும் உண்டு.

இடைக்காட்டுச் சித்தர் ஆனந்தக் கோனாரையும் ஆட்டையும் பசுமாட்டையும் அன்னத்தையும் புல்லாங்குழலையும் அறிவையும் நெஞ்சையும் மயிலையும் குயிலையும் தம் முன் நிறுத்தி பல உலகியல்புகளையும் உண்மைகளையும் உணர்த்தியிருக்கிறார். ஜீவன் என்றும்

பசுவிலிருந்து ஞானப்பால் கறக்கும்படி தூண்டியிருக்கிறார்.

**மனம் என்னும் மாடு அடங்கில் தாண்டவகோனே – முத்தி**

**வாய்த்தது என்று எண்ணோடா தாண்டவகோனே.** **இ.சி.பா: 13**

என்பதில் கட்டுக்கடங்காமல் இருக்கும் மனம் என்ற மாட்டை கட்டுப்படுத்திவிட்டால் முக்தி கிடைக்கும் என அறிவுறுத்துகிறார்.

**சிவம் என்னும் பாம்பு இறந்தால் தாண்டவக்கோனே – யாவும்**

**சித்தி என்றே நினையேடா தாண்டவகோனே.** **இ.சி.பா: 14**

என்னும் பாடலில் கோபம், வெகுளி என்று சொல்லப்படுகின்ற நச்சுப் பாம்பை அடக்கி உள்ளத்திலிருந்து விரட்டி அடித்துவிட்டால் சித்தி கிடைக்கும் என்கிறார்.

**தேவன் உதவியின்றி பசுவே தேர்ந்திடில் வேறொன்றில்லை**

**ஆவிக்கும் ஆவியதாம் பசுவே அத்தன் திருவடியே** **இ.சி.பா: 38**

என்னும் பாடல் ‘உயிரே! பரம்பொருளின் துணையின்றி நீ வாழ்ந்து காட்ட முடியாது. உயிருக்கு உயிராய் இருப்பது பரம்பொருளின் அருள்தான் என்பதை மறவாதே’ என்கிறது.

**முக்திக்கு வழி**

**முத்திக்கு வித்தான மூர்த்தியைத் தொழுது**
**முத்திக் குறுதிகள் செய்யாக்கால்**
**சித்தியும் பத்தியும் சத்தியு முத்தியுஞ்**
**சேரா வாகுமே கோனாரே.** **இ.சி.பா: 3**

**தொல்லைப் பிறவியின் தொந்தமுற் றறவே**
**சோம்பலற் றுத்தவஞ் செய்யாக்கால்**
**எல்லையில் கடவு ளெய்தும் பதமுமக்கு**
**இல்லையென் றெண்ணுவர் கோனாரே.** **இ.சி.பா: 4**

என்னும் பாடல்களில் முத்திக்கு முழுமுதற் காரணமாக உள்ள பரம்பொருளாகிய மூர்த்தியை வழிபடுவதே சிறந்த முறை. இதை தவிர வேறு எந்த இறைநெறியும் கைக்கூடாது. பிறவித் தொல்லையிலிருந்து முழுமையாக விடுபட தவம் செய்வது மிகச்சிற்நத வழியாகும். அத்தவத்தை சோம்பலின்றி ஒருமனதாக செய்ய வேண்டும் என்ற முக்தி அடையும் வழிகளை எளிதாக சித்தர் உணர்த்தியுள்ளார். நாராணக்கோன் என்பது இடைக்காடர் மரபு அதாவது மனிதர் குலத்தின் தலைவனாக நிற்கும் நிலையாகும்.

**மெய்ஞ்ஞான உணர்வு ஏற்படுவதற்குரிய வழி**
**ஆரண மூலத்தை அன்புடனே பர**
**மானந்தக் கோலத்தைப் பண்புடனே**
**பூரண மாகவே சிந்தித்து மெய்ஞ்ஞானப்**
**போதத்தைச் சார்ந்திடும் கோனாரே.** இ.சி.பா: 5

என்னும் பாடல் 'மறைகளின் தோற்றமாகவும் அதன் உட்பொருளாகவும் இருக்கின்ற பரம் பொருளை தியானித்தல் வேண்டும். அதுவே சித்தர்களின் முறையிலான சிந்தனை. பரம்பொருள் ஆனந்த வடிவமானது. அந்த ஆனந்த கோலத்தை பண்போடு, அன்போடு, முறையோடு சிந்தித்து முழுமையாக தோய்ந்து தியானிப்பதே மெய்ஞ்ஞான உணர்விற்கான வழிகள்' என்றுரைக்கின்றது. மேலும்,

**பஞ்ச விதமாய்ச் சஞ்சலம் பறக்கப்**
**பற்றற நின்றதைப் பற்றி யன்பாய்**
**நெஞ்சத் திருத்தி யிரவு பகலுமே**
**நேசித்துக் கொள்ளுவீர் கோனாரே.** இ.சி.பா: 10

என்ற பாடல் 'ஐம்பொறிகளிலுமே சஞ்சலம் படர்ந்து நிற்கிறது. இதை பறக்கடிக்க வேண்டும். நெஞ்சகத்திலே நிலைநிறுத்தி இரவும் பகலும் நேசத்தோடு கூடினால் அதுவே உய்வுக்குரிய ஒரே வழி' என்று உணர்த்துகின்றது.

**மெய்யைக் கையாளும் வழி**
**விண்ணாடி வத்துவை மெய்யறிவிற் காணுங்கோனே என்றும்**
**மெய்யே மெய்யிற்கொண்டு மெய்யறிவிற் செல்லுங்கோனே**
இ.சி.பா: 125

என்னும் பாடலானது 'விண்ணாடி வத்து என்பது சிதாகாசத்தில் வீற்றிருக்கும் பரத்துவம். இது தன்னைத்தானே உள்ளே பார்க்கும் தியானமாகும். இந்த சிதாகாசம் என்பது உணர்வுகள் உற்பத்தி ஆகும் சூன்ய பிரதேசம். இது ஆக்ஞா சக்கரத்தின் மூலமாக காணக்கூடிய இருண்ட வெளியாகும். இதுதான் மனதின் தொடர்பை ஏற்படுத்தக்கூடியது. இந்த தொடர்பினால் மனிதன் தன் மனதை அடையவும் உள்மனதை அடையவும் அதனையும் தாண்டி அதற்கப்பால் உள்ள மிக நுண்ணிய உணர்வுள்ள மகா உள்மனதையும் தொடர்புகொள்ள முடியும். இந்த நிலையை சிதாகாச தாரணை மூலம் எட்ட முடியும். மனிதனது உணர்வுகளின் இரகசியங்களையும் உள்ளத்தின் நிலைகளையும் தெரிந்துகொள்ள ஓர் அற்புதமான அமைந்த திறவுகோலாகும். இந்த சிதாகாச தரிசன சூட்சமம் சாதனையை முடிப்பவர்கள் அரும்பெரும் காட்சிகளைக் காணக்கூடிய சித்தர்களாக ஆகி விடுவார்கள். உடம்பாகிய மெய்யில் ஞானசாதனமாகிய மெய்யைக்

கையாளுதல் வேண்டும். இதுவே ஞானிகள் சொல்கின்ற எல்லா பயிற்சி முறைக்கும் அடிப்படையாக அமைந்த சாதனமாகும்' என்பதை உணர்த்துகிறது.

**இருவினைகள் நீங்கவழி**

நமது கண்கள் கொண்டு அகத்திலே அட்புகுந்து காணுவது. கால காலமின்மை என்ற நிலைகளைக் கடந்த ஒளியாகும். அவ்வொளி கற்பனைக்கு எட்டாத அற்புதமாகும். ஞான நூல்களில் கூறியுள்ள நுட்பமான பொரு இந்த ஒளி. இவ்வொளியை அகக்கண் கொண்டு காணவேண்டும். மாசற்ற இந்த ஒளியினை மோன ஒடுக்கத்தில் கண்டு இரவும் பகலும் ஒன்றி நிற்கக் கற்றுக் கொண்டால் யமன் நம்மை நெருங்கமாட்டான். சூரிய ஒளியில் பனி மறைவது போல் இந்த ஒளிக் காட்சியில் வினைகள் நீங்கும் என்பதனை

**காலா காலங் கடந்திடு சோதியைக்**
**கற்பனை கடந்த அற்புதத்தை**
**நூலாற் பெரியவர் சொன்னநுண் பொருளை**
**நோக்கத்திற் காண்பது கோனாரே. இ.சி.பா: 6**

**சொல்லருஞ் சகல நிட்கள மானதைக்**
**சொல்லினாற் சொல்லாமற் கோனாரே**
**அல்லும் பகலும் மகத்தி லிருந்திடிற்**
**அந்தகன் கிட்டுமோ கோனாரே இ.சி.பா: 7**

**சூரியன் வாள்பட்ட துய்ய பனிகெடுந்**
**தோற்றம்போல் வெவ்வினை தூள் படவே இ.சி.பா: 8**

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன. பாம்பாட்டிசித்தர் பாடல்களில் ஒன்றான

**'நாறுமீனைப் பலதரம் நல்ல தண்ணீரால்**
**நாளும் கழுவினும் அதன் நாற்றம் போமோ**
**கூறும் உடல் பல நதியாடிக் கொண்டதால்**
**கொண்ட மலம் நீங்காதென்று ஆடுபாம்பே'**

**பாம்பாட்டி சித்தர் பாடல் : 64**

என்னும் அடிகள் 'நாறுகின்ற மீனை பல தடைவ நல்ல நீரால் கழுவினாலும் அதன் நாற்றம் போகாது. அதுபோல பலபேரால் கூறு கூறாக கொண்டு வந்த இந்த உடலானது புண்ணியம் என்று கூறி புனித நதிகளில் நீராடினாலும் கொண்ட மும்மலங்களான ஆணவம், கன்மம். மாயை ஆகியவை போகாது என்று கூறுகிறார்.

**தொகுப்புரை**

இவ்வாறு இடைக்காட்டுச்சித்தரின் பாடல்களின் வழி முக்திக்குரிய வழிகளாக பரம்பொருளை வணங்குவதும், தவம் செய்வதுமாகிய செயல்களைக் கூறுவதோடு மெய்ஞ்ஞான உணர்வு ஏற்படுவதற்குரிய வழிகளைக் கூறி அதனை கடைப்பிடிக்கும் நெறிமுறைகளையும் அறியமுடிகின்றது. நம் உடம்பாகிய மெய்யைக் கையாளும் அவசியத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது. அகக்கண் கொண்டு காணும் மெய்ஞான ஒளியை மோன ஒடுக்கத்தில் காண்பதனால் இம்மை, மறுமை என்ற இரு வினைகள் நீங்க வழிவகுக்கும் முத்தி நிலையையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. எஸ்.ஆர்.சங்கரலிங்கனார் - சித்தர்கள் கலைக்களஞ்சியம்
சித்தாசிரமம்;, சென்னை. 1997.
2. டி.என்.கணபதி - தமிழ்ச் சித்தர் மரபு
ரவி பதிப்பகம், சென்னை. 2004.
3. மீ.ப.சோமு - சித்தர் இலக்கியம் (ஆய்வு நூல்)
அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, அண்ணாமலைநகர், 2009.
4. நந்தா - சித்தா குகை
அருவி வெளியீடு. 2007.
5. சுவாமி ஆத்மானந்தா - பாம்பாட்டிச் சித்தரின் பாடல்கள்
(மூலமும் விளக்கவுரையும் )
வானதி பதிப்பகம், சென்னை.